**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,**
**ARIYALUR**

| | | |
|---|---|---|
| R.W.– 1 ரவிச்சந்திரன் S/o.சாமிக்கண்ணு | MCOP No.9/2024 | 08.07.2026. |

(சாட்சி ஆஜர், சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது)

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இம்மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு முதல் சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை எனது தரப்பு முதல் விசராணையாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

04.05.2018 அன்று நான் நடத்துனராக பணிபுரிந்த வாகனத்தின் ஓட்டுநராக பிரபாகரன் இருந்தார். கயர்லாபாத் போலீசார் மேற்படி பிரபாகரன் மீது குற்ற எண்.79/2018 ல் வழக்கு பதிவு செய்திருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. விபத்து நடந்தது மண்டையன்குறிச்சி கீழமேல் சாலை என்றால் சரிதான். பிரபாகரன் மேற்படி பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று திடீரென்று பிரேக் போட்டதால் வண்டியில் பயணம் செய்த இரண்டு பயணிகள் வண்டியிலிருந்து வெளியே விழுந்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிர்வாகத்திலிருந்து விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று நான் மேற்படி பேருந்தில் நடத்துனராக பணிபுரியவில்லை என்றாலும், நிர்வாகத்திற்கு

ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

சாட்சியின் கையொப்பம்: sd./– ரவிச்சந்திரன்

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.07.08 10:57:26 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அரியலூர்.